**செய்தி வெளியீடு எண்: 765** **நாள்: 24.10.2018**

# செய்தி வெளியீடு

## தமிழக அரசின் புதிய முயற்சி

### விவசாயிகளின் விளைபொருட்களையும், மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களையும் தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையின் மூலம் நேரடி விற்பனை

இந்தியாவில் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடியில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. தோட்டக்கலைப் பயிர்கள் 13.15 இலட்சம் எக்டரில் சாகுபடி செய்யப்பட்டு 193.22 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. சுமார் 32 இலட்சம் விவசாயிகள் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். திட்டங்களைச் செயல்படுத்தி தோட்டக்கலையில் மேம்பாடு அடையவும், விளைபொருட்களை சந்தைப்படுத்த உதவவும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் கீழ் தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை (TANHODA) செயல்பட்டு வருகிறது.

விவசாயிகளின் உற்பத்தியை இருமடங்காக்கி, அதன் மூலம் அவர்களின் வருமானத்தைப் பெருக்க தமிழ்நாடு அரசு பெருமுயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தற்போது, விவசாயிகள் மற்றும் விவசாயக் குழுக்கள் உற்பத்தி செய்யும் தரமான விளைபொருட்களையும், மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களையும் நேரடியாக சந்தைப்படுத்தும் முயற்சிகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது.

முதற்கட்டமாக, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க மாண்புமிகு தமிழ்நாடு வேளாண்மை துறை அமைச்சர்** அவர்களின் ஆலோசனைக்கிணங்க தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை விவசாயிகள் உற்பத்தி செய்யும் தரமான தோட்டக்கலை விளைப் பொருட்களை சந்தைப்படுத்த ஒரு புதிய முயற்சியாக சமையலுக்கு நறுமணமூட்டும் பொருட்கள்

அடங்கிய பாக்கெட்டுகள், உலர் பழங்கள் பாக்கெட்கள் மற்றும் நீரா சர்க்கரை குறைந்த விலையில் நுகர்வோர் பயனடையும் வண்ணம் விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்படுகிறது.

ஏலக்காய் (50 கிராம்) , மிளகு (50 கிராம்), கிராம்பு (50 கிராம்), ஜாதிக்காய் (30 கிராம்), ஜாதிபத்திரி (20 கிராம்), இலவங்கப்பட்டை (25 கிராம்) ஆகிய **ஆறு வகையான நறுமணமூட்டும் பொருட்கள் அடங்கிய பாக்கெட் ரூ.300/–க்கு** பொதுமக்களுக்கு விழாக்காலங்களை முன்னிட்டு விற்பனை செய்யப்படுகிறது. மேலும், தமிழகத்திலேயே உற்பத்தி செய்யப்பட்டு, மதிப்பு கூட்டப்பட்ட சுவையூட்டப்பட்ட முந்திரியும், மா, அன்னாசி, நெல்லி, பலா போன்ற பதப்படுத்தப்பட்ட பழங்கள் போன்றவற்றையும்,

தென்னை உற்பத்தியாளர் நிறுவனம் மூலம் தயாரிக்கப்படும் நீரா சர்க்கரை மற்றும் நீரா கருப்பட்டி போன்றவற்றையும் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்று (24.10.2018 – புதன்கிழமை) சென்னை, செம்மொழிப் பூங்காவில் உள்ள தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையின் விற்பனை மையத்தில், வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மைச் செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்களால் சமையலுக்கு நறுமணமூட்டும் பொருட்கள் அடங்கிய பாக்கெட்டுகள், உலர் பழங்கள் பாக்கெட்டுகள் மற்றும் நீரா சர்க்கரை ஆகியவற்றின் முதல் விற்பனை தொடங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் என்.சுப்பையன், இ.ஆ.ப., அவர்களும் தோட்டக்கலைத் துறை உயர் அதிகாரிகளும் உடனிருந்தனர்.

நறுமணமூட்டும் பொருட்கள் அடங்கிய பாக்கெட்டுகள் மற்றும் உலர்ந்த பழங்கள் அடங்கிய பாக்கெட்டுகள் மாவட்டங்களிலுள்ள தோட்டக்கலை இணை இயக்குநர் / துணை இயக்குநர் அலுவலகங்கள், அரசு தோட்டக்கலை பூங்காக்கள், மற்றும் தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையின் விற்பனை மையங்கள் ஆகியவற்றின் மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட

பொருட்களை அதிக அளவில் வாங்க விரும்புவோர் 9942835261 என்ற அலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டோ அல்லது dd.dohpc.chn@tn.gov.in மின்னஞ்சல் முகவரியில் முன்பதிவு செய்தோ பெற்றுக் கொள்ளலாம்.

விவசாய விளைபொருட்களை நேரடியாக சந்தைப்படுத்துவதன் மூலம், குறைந்த விலைக்கு தரமான பொருட்களை நுகர்வோர் பெறமுடியும். எனவே, பொதுமக்கள் இவ்வாய்ப்பினை நன்கு பயன்படுத்தி கொள்ளுமாறு கனிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், விவரங்களை தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் இணையதளம் http://tnhorticulture.tn.gov.in மூலமாகவும் @thottakalai என்ற டுவிட்டர் கணக்கின் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**செம்மொழி பூங்காவில் விற்பனை செய்யப்படும் பொருட்களின் இன்றைய விலை விவரம்**

1. சமையலுக்கு நறுமணமூட்டும் பொருட்கள் கொண்ட பாக்கெட் – ரூ.300
2. உலர் பழங்கள் கொண்ட பாக்கெட் – ரூ.300
3. கிராம்பு 50 கிராம் பாட்டில் – ரூ.55
4. ஏலக்காய் 50 கிராம் பாட்டில் – ரூ.80
5. மிளகு 50 கிராம் – ரூ. 40
6. சூக்கினி – ரூ.50/கிலோ
7. கேரட் – ரூ.60/கிலோ
8. பீட்ரூட் – ரூ. 40/கிலோ
9. முள்ளங்கி – ரூ. 45/கிலோ
10. முட்டை கோஸ் (பச்சை) – ரூ.35/கிலோ
11. முட்டை கோஸ் (ஊதா) – ரூ.50/கிலோ
12. பிரக்கோலி – ரூ.90/கிலோ
13. டர்னிப் – ரூ.50/கிலோ

14. நீரா கருப்பட்டி 100 கிராம் – ரூ. 80
15. நீரா சர்க்கரை 250 கிராம் – ரூ. 150

காய்கறி அலங்கார தட்டுகளும் மலர்கொத்துகளும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது. இவற்றின் தேவையை பொருத்து விற்பனை விலை மாறும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**